# புக் மீட் - 2

இடம் : மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
உத்தமசோழபுரம், சேலம் - 10

நாள் : 26.03.2023 (சனி)

நேரம் : காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை

## டோட்டோ ஜான் - ஜன்னலில் ஒரு சிறுமி

சேலம் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் நடைபெற்ற புக் மீட் - இரண்டாவது அமர்வில் வாசிக்கப்பட்ட டோட்டோ ஜான் - ஜன்னலில் ஒரு சிறுமி புத்தகம் மிக அருமையாக இருந்தது.



இந்த புத்தகத்தில் மூலம் மாணவர்களின் மனநிலை என்ன, அவர்கள் எதை விரும்புகிறார்கள், எந்த மாதிரியான கற்றல் கற்பித்தல் நடைமுறை மாணவர்கள் மிகவும் விரும்பக் கூடியதாக உள்ளது , அது அவர்களை எவ்வளவு கவர்ந்துள்ளது, அவர்களின் விருப்பத்தை கவர்ந்த கற்றல்-கற்பித்தல் நடைமுறையால் அவர்கள் வாழ்க்கையில் எத்தகைய உயர்வை

அடைந்தார்கள் என்பதை எல்லாம் இந்த புத்தகத்தை வாசித்ததன் மூலம்

தெரிந்து கொள்ள




முடிந்தது.

இந்த புத்தகம் எனக்குள் மட்டுமல்ல, வாசிக்கும் ஒவ்வொருவருடைய மனதில் நிச்சயம் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றால் அது மிகை ஆகாது. இந்த புத்தகத்தை வாசிக்கும் ஒவ்வொருவரும் தனக்கும் இப்படி ஒரு தலைமை ஆசிரியர் கிடைக்க மாட்டாரா? தானும் இப்படி ஒரு பள்ளியில் பயில மாட்டோமா? நாம் அந்த டோட்டோ ஜான் குழந்தையாக மாற மாட்டோமா என்று ஏங்குவது நிச்சயம்!




அந்த வகையில் இந்த டோட்டோ ஜான் ஜன்னலில் ஒரு சிறுமி புத்தகத்தின் மூலம் வகுப்பறைக்கும் ஆசிரியர்களுக்கு தேவையான சில கருத்துக்களும் என் பார்வையில்:

## வகுப்பறைக்கு தேவையான கருத்துக்கள்:

- மாணவர்கள் சுதந்திரமான கற்றல் சூழ்நிலையை விரும்புகிறார்கள்.
- மாணவர்கள் தாங்கள் விரும்பும் பாடத்தை விருப்பம்போல் கற்பதற்கான வாய்ப்பையும் மிக அதிகமாக விரும்புகிறார்கள். குழந்தைகளுக்கு புத்தக அறிவோடு, அனுபவ அறிவை இணைத்து

வழங்குதல் மிகச்சிறப்பான பலனை தரும்.( உதாரணமாக தைரியப்பரீட்சை போன்ற நிகழ்வு)

- பாட கருத்துக்கள் மட்டுமின்றி இசை, தாளப் பயிற்சி, நீச்சல், மரங்களை ஒதுக்கீடு செய்து பராமரித்தல், போட்டிகள் போன்ற பிற வாழ்வியல் செயல்பாடுகளையும் இணைத்து கற்பிக்கும் போது மாணவர்கள் மிக அதிக ஆர்வமுடன் செயல்படுகிறார்கள்.

- மாணவர்கள் போட்டியில் வெற்றி பெறும்போது பரிசுகளாக காய்கறிகளை வழங்குவது மிகச் சிறப்பான நிகழ்வாக இருந்தது.

- குழந்தைகள் அனைத்து உயிர்களையும் சமமாக பாதிக்கின்றனர் அவற்றை நாம் ஊக்குவித்தாலே அது அவர்களுடைய வாழ்வில் நிச்சயம் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும். (கோழிக்குஞ்சுகள், வளர்ப்பு பிராணி - ராக்கி)

- தன் சக நண்பனும் தான் பெறும் அனுபவங்களை பெற வேண்டும் என்ற அற்புதமான எண்ணம் கொண்டவர்கள் நம் குழந்தைகள், அதற்கான வாய்ப்புகள் வகுப்பறையில் வழங்கப்படும் வேண்டும். ( யசுயாகிஜானை மரமேற வைத்து மகிழ்தல்)

## ஆசிரியருக்கு தேவையான கருத்துக்கள் *:*

- ❖ நாம் முதலில் குழந்தைகள் பேசுவதை பொறுமையாக கேட்க வேண்டும் அவ்வாறு கேட்கும் போதே அந்த குழந்தைகளுக்கு நம்ம மேல் ஒரு நம்பிக்கை ஏற்படும், அவர்களுடைய பேச்சுக்களுக்கு நாம் உரிய மதிப்பளிக்க வேண்டும்( உதாரணமாக ப தலைமை ஆசிரியர் டோட்டோ ஜான் நான்கு மணி நேரம் பேசுவதை பொறுமையாக கேட்டார்).

- ❖ குழந்தைகளிடம் பாலின வேறுபாடு கருதாமல் சமமாக மதிப்பது ஒவ்வொரு ஆசிரியருடைய சிறப்பான கடமையாகும்.

- ❖ சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு அவர்களுக்கு தகுந்தாற்போல் பாடங்களையும் போட்டிகளையும் தயார் செய்தல் ஒவ்வொரு ஆசிரியரின் கடமையாகும். இப்புத்தகத்தில் தலைமை ஆசிரியர் இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட மாணவனுக்கும் கை, கால்கள் வளர்ச்சி குறைந்த மாணவனுக்கும் ஏற்றார் போன்ற போட்டிகள் வடிவமைத்தது சிறப்பாக இருந்தது.

- ❖ குழந்தைகளின் நல்ல முயற்சிகளை கண்டிக்காமல், ஊக்குவித்தல். டோட்டோ ஜானின் பர்ஸ் கழிவறை குழாயில் விழுந்த நிகழ்வையும், தலைமையாசிரியரின் அணுகுமுறையை இதற்கு உதாரணமாக கூறலாம்.

- ❖ பரிசுப் பொருட்களாக காய்கறிகளை வழங்கிய பின், அவை "உங்களின் உழைப்பிற்கான பரிசு, உங்கள் உழைப்பின் மூலமே,இன்று உங்களின்

உணவு தயாராகிறது"  என்ற வார்த்தைகளின் மூலம் உழைப்பின் அருமையை மாணவர்களுக்கு உணரச் செய்தல்.

- மாணவர்களுக்கு தேவையில்லாத பயங்களை  களைய வேண்டியது ஒவ்வொரு ஆசிரியருடைய கடமையாகும்.  இப்புத்தகத்தில் தைரியப்பரீட்சை என்ற நிகழ்வின் மூலம் பேய் பிசாசு போன்ற பயங்களை மாணவர்களிடம் நீக்கினர்.

- வாரம் ஒரு முறையேனும் பள்ளி நடை, சுதந்திரமாக மாணவர்கள் வெளியில் செல்ல  அனுமதித்து ஆசிரியர் உடன்  இருந்து செயல்படுவது மிகச் சிறப்பான ஒரு நிகழ்வாக அமையும் இருக்கும் என நம்புகிறேன்.

- கூடாரம் அமைத்தல் போன்ற வாழ்வியல் திறன் சார்ந்த பயிற்சிகள் தொடக்கநிலை மாணவர்களுக்கும் தேவைப்படுகின்றன என்பதை அறிந்து  கொண்டேன்.

- தன் பள்ளியே தனக்கு பெருமை என்ற உணர்வினை மாணவர்களிடையே விதைத்தல் ஒவ்வொரு ஆசிரியருடைய கடமையாகும்.

- மாணவர்கள் ஒரு செயலை சுதந்திரமாக செய்வதற்கு தடையாக உள்ள பொருட்களை/ செயல்களை  நீக்குதல்.  இப்புத்தகத்தில் தலைமை ஆசிரியர் மாணவர்கள் நல்ல ஆடையை அணிந்திருந்தால் விளையாடுவதற்கு கூச்சப்படுவார்கள் என்பதை உணர்ந்து மாணவர்கள் பள்ளிக்கு சாதாரண உரையிலேயே வரலாம் என வாய்ப்பு அளித்திருப்பது மிகச்சிறந்த முயற்சியாகும் .

- பள்ளி கண்முன் எரிந்து கொண்டிருந்த நிலையிலும், மனம் கலங்காமல் தன்னால் மீண்டும் உருவாக்கமுடியும் என்ற தலைமையாசிரியர் திரு. கோபயாஷியின் மனத்திண்ணம் நிச்சயம் அனைத்து ஆசிரியர்களுக்கும் தேவையான ஒன்று.





en

என் வகுப்பறையில் நான் செயல்படுத்த எண்ணிக்கொண்ட நிகழ்வுகள் *:*

1. குழந்தைகள் கூற வருவதை முழுமையாகவும், பொறுமையாகவும் கேட்டல்
2. பள்ளி நடை
3. தாள உடற்பயிற்சி
4. காய்கறிகள் பரிசு
5. குழந்தையின் நிலைக்கேற்ப செயல்பாடுகள்.

ஆக்கம்*:*
மீனா வ,
வாசிப்பாளர்,
துக்கியாம்பாளையம்.